# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 6092/SCIC/2025**

திரு ரா. சூச்சி — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி 603 202
செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 30.12.2024 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.01.2025 |
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 25.01.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 20.02.2025<br>07.03.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.04.2025 |
| 6. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.10.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 30.12.2024 தேதியிட்டு

அனுப்பிய மனுவில், 2006ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவண எண்.3470/2006 நாள் 21.11.2006 என்பதில் பொது அதிகாரம் அளித்த நபர்களின் எண்ணிகை மற்றும் விவரங்கள் என்பது தொடர்பாக 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திருமதி சே. அபிராமி, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம் ஆணையத்தில் ஆஜரானார்.

3. மனுதாரர் தனது 30.12.2024 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவில் பொது அதிகார ஆவணம் குறித்த தகவல்கள் மற்றும் கைரேகைப் பதிவேட்டின் நகல் ஆகியவற்றை வழங்குமாறு கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரர் கோரிய ஆவண நகல்கள் மட்டும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் தான் கோரிய கைரேகைப் பதிவேடானது தனக்கு வழங்கப்படவில்லையென்று விசாரணையின்போது வாதிட்டார்.

**4. எனவே, மனுதாரர் 15.09.2026 அன்று முற்பகல் 11 மணிக்கு கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்லுமாறும், அன்றைய தினம் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய கைரேகைப் பதிவேடுகள் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், அதனடிப்படையில் மனுதாரர் கோரிய கைரேகைப் பதிவேடு தொடர்பான ஆவண நகல்களை உரிய சான்றொப்பமிட்டு மனுதாரருக்கு வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. இந்நிகழ்வில் மனுதாரர் மூன்றாம் தரப்பினர் இல்லையென்பதும், இந்த ஆவணப்பதிவில் மனுதாரருக்கும் தொடர்புள்ளது என்பதும், இது இரண்டு ஆவணங்கள் பதிவு சம்மந்தப்பட்டது என்பதும் இன்றைய விசாரணையின்போது ஆணையத்திற்கு தெரியவந்துள்ளது. மேலும், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டது குறித்த அறிக்கையினை 30.09.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6092/SCIC/2025</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கூடுவாஞ்சேரி 603 202
செங்கல்பட்டு மாவட்டம்

**மனுதாரர்**

திரு ரா. சூச்சி,
த/பெ அ. ராமசாமி,
பிளாட் எண்.32, முதல் தளம்,
முதல் குறுக்குத் தெரு,
சோழமண்டல தேவிநகர்,
ஈஞ்சம்பாக்கம்,
சென்னை 600 115

TK/PS